DEPOSITION OF WITNESS.

IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, SIVAGANGAI

S.C.No. 138/2024

PROSECUTION WITNESS No - PW-9

| Name : | இரஜேந்திரபிரசாத் | Caste: | |
|---|---|---|---|
| Father Name | வீரபத்திரன் | Calling: | சார்பு ஆய்வாளர் |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | 40 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 04th day of March 2025

எதிரி நீதிமன்றத்தில் நேரில் ஆஜரில்லை அவருக்காக மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**முதல் விசாரணை:**

நான் தற்போது திருப்பூர் மாநகரம் வடக்கு காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 27.06.2014-ம் தேதி காலை 9.00 மணியளில் நான் திருப்புவனம் காவல் நிலையத்தில் நிலைய பொறுப்பு அலுவலில் இருந்த போது தூத்துக்குடி மாவட்டம் எட்டயபுரம் படர்ந்தபுலி கிராமத்தைச் சேர்ந்த போர்த்திநாயக்கர் என்பவர் மகன் கனகவேல் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமாக புகாரினைப்பெற்றேன். நான் பெற்ற புகார் **அ.சா.ஆ.12**. ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி புகாருடன் திருப்புவனம் காவல்நிலைய குற்ற எண். 251/2014 பிரிவு 302 இ.த.ச வாக வழக்கு பதிவு செய்தேன். நான் பதிவு செய்த முதல்தகவல்அறிக்கை **அ.சா.ஆ.13**. ஆக குறியீடு செய்யப்படுகிறது. இவ்வழக்கு கொலை வழக்கு என்பதால் இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் அசலையும், வாதியின் புகாரையும் இணைத்து நிலைய காவலர் 991 திரு.மீனாட்சி சுந்தரம் என்பவர் மூலம் கனம் குற்றவியல் நீதித்துறை நடுவர், மானாமதுரை அவர்களுக்கு துரித தபால் மூலம் அனுப்பியும் ஒரு நகலை திருப்புவனம் காவல் ஆய்வாளர் அவர்களின் விசாரணைக்கு வைத்தும், மற்ற பிரதிகளை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன். இது சம்மந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:**

26.06.2014ம் தேதி இரவு வழக்கு சம்பவம் நடைபெற்றது என்றும் 27.06.2014ம் தேதி தான் எழுத்து மூலமான புகார் வந்தது என்றால் சரிதான். இவ்வழக்குசம்மந்தமாக என்னிடம் மருத்துவமனையிலிருந்து தனியாக தகவல் எதுவும் வரவில்லை என்றால்

KANNAYEERAM ARIVOLI

Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2025.03.04 17:16:17 +0530

சரிதான். வழக்கின் புகார்தாரர் சம்பவத்தை கேள்விபட்டதாக குறிப்பிட்டுதான் புகார் வழங்கியுள்ளார் என்றால் சரிதான். மர்மநபர்கள் தாக்கியதாகவும் எதிரி யார் என்று தெரியாத நிலையிலும் புகார் வழங்கியாக குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். காலை 9.00 மணியில் பதிவுசெய்யப்பட்டதாக சொல்லும் முதல்தகவல்அறிக்கை மதியம் 12.00 மணிக்குதான் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டது என்றால் சரிதான். அதற்கான காலதாமதம் குறித்து குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் வழக்கு பதிவு செய்த உடனேயே உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதால் நான் தனியாக குறிப்பிடவில்லை. திருப்புவனத்திற்கும் மானாமதுரை நீதிமன்றத்திற்கும் இடையே எத்தனை கிமீ என்றால் சுமார் 30கிமீ இருக்கும். நான் சொன்ன மாதிரி சொன்ன நேரத்தில் எந்த புகாரும் பெறவில்லை என்றும் வழக்கிற்காக பின்னிட்டு தயார் செய்து வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

**மறு விசாரணை**. இல்லை

சாட்சி கூறியதை என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காட்டி, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது.

KANNAYEERAM ARIVOLI

Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2025.03.04 17:16:26 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
சிவகங்கை